# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20,வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2014.07.17

ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் : 07/2014

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**பல்கலைக்கழக ஆளணிக்கு மேலதிக மாதாந்தக் கொடுப்பனவொன்றைச் செலுத்துதல்**

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின், 2014.07.01 ஆம் திகதிய DMS/1528(A) ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் பல்கலைக்கழகங்களின் ஆளணிக்கு (கல்வி சார் மற்றும் கல்வி சாரா) 2014.07.01 ஆம் திகதி முதல் அடிப்படைச் சம்பளத்தின் 20% இனை மேலதிகக் கொடுப்பனவாகச் செலுத்துவதற்கு திறைசேரியின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

02. இந்த மேலதிக கொடுப்பனவை 2011/2012 கல்வியாண்டை அடிப்படையாகக்கொண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவகங்களின் ஆளணிகளுக்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

03. மேலும், தொழில் சந்தையில் தமது பட்டதாரிகளுக்கு நிலவும் வரையறுக்கப்பட்ட கேள்வி காரணமாக, இலக்காகக் கொள்ளப்பட்ட எண்ணிக்கையிலும் பார்க்க 10% மான மேலதிக மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கு முடியாதுபோன பீடங்கள்/நிறுவகங்கள் மேற்குறிப்பிட்ட தொழில் சந்தைத் தேவையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அவற்றின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

04. தயவு செய்து இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

ஒப்பம்: பேராசிரியர் ஷனிக்கா ஹிரிம்புரேகம
தலைவர்

பிரதிகள்:-

1. செயலாளர், உயர் கல்வி அமைச்சு
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
6. பீடாதிபதிகள்
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
8. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
9. நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars)
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவனங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள் / உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் / சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் / உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/2/9/86